1981 ஏப்ரல் 1]

தவறு நடந்திருக்கிறது என்று தெரிந்தால் நிச்சயமாக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். ஆகவே, அந்த ஜூனியர்ஸ் நம்பர்கள் இருந்தால் அதையும் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அது இல்லாவிட்டாலும் இருக்கிற விவரங்களை வைத்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு: ஏ. சி. ண்முகம் : தலைவரர்களே, வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து 8 ஆண்டுகள் 10 ஆண்டுகள் ஆகியும் வேலை கிடைக்கவில்லை ; ஆனால் அவர்களுடைய வயது ஏறிக் கொண்டிருக்கிறது. 'கொடி , கொடிது அவல வாழ்வு கொடிது' என்பார்கள். அப்படி இருக்கும்போது தயவுசெய்து வயது வரம்பை நீக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரவர்களே, அதுபற்றி அரசு பரிசீலனை செய்யும்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, வேலை பெறுவதற் வதற்கான வயது வரம்பை 55 என்று நிர்ணயிக்க அரசு முன் வருமா? 55 வயதிற்குள் எப்போது வேண்டுமானாலும் வேலைக்குப் போகலாம். வேலையற்று 'தொல்லைப்பட்டு, வெளியே திரியும் விபரீத நெஞ்சங்கள்'' என்று சி.என்.ஏ. அவர்கள் சொன்னார்கள். ஆக, வேலையற்றுத் திரியும்போது விபரீத எண்ணங்கள் வருகின்றன. ஆகவே, அத்தகைய விபரீத எண்ணம் ஏற்படாமல் இருக்க அவர்களுக்கு வேலை கொடுக்க அரசு முன்வருமா? வேலை வாய்ப்பு அலுவலகத்தில் 55 வயதுவரையில் பதிவு செய்து கொள்ளவும், வேலை பெறுவதற்கான வயது வரம்பை 55 என்று நிர்ணயிக்கவும் அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரவர்களே, அத்தகைய எண்ணம் இல்லை.

வடாற்காடு வேலைவாய்ப்பு அலுவலகத்தை இடம் மாற்றுதல்.

*வினா எண். 591—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் ஆலங்காயத்திலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகத்தை திருப்பத்தூரில் மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இதை மாற்றுவதற்காக அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

[1981 ஏப்ரல் 1

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

திரு. ப. சுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, அந்த வேலை வாய்ப்பு அலுவலகம் மலைவாழ் மக்களுக்காக வைக்கப் பட்டது. அப்படி மலைவாழ் மக்களுக்காக வைக்கப்பட்டாலும் இந்த அலுவலகம் ஒதுக்குபுறத்தில் இருப்பதால் ஜவ்வாது மலை யிலிருந்து வருகிறவர்களும் ஏலகிரியிலிருந்து வருகிறவர்களும், திருப்பத்தூருக்கு வந்துதான் ஆலங்காயம் போக வேண்டும். ஆகவே, ஏழை எளிய மக்கள் இந்த வேலைவாய்ப்பு அலுவல கத்திற்கு வருவதற்கு மிகவும் அவதிப்படுகிறார்கள். ஆகவே, இந்த அலுவலகத்தை மாற்றி திருப்பத்தூரில் வைக்க அரசு உத் தேசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேர வைத் தலைவரவர்களே, ஆலங்காயத்தில் அமைக்கப்பட்டிருக் கின்றது இந்த வேலை வாய்ப்பு அலுவலகம். அந்தப் பகுதி யில் ஜவ்வாது மலையில் உள்ள மொத்த மக்கள் தொகை 61,237 ஆகும். அதிலே, 38,706 பேர் மலைவாழ் மக்கள். அதுமட்டு மல்லாமல் ஆலங்காயம், ஊராட்சி ஒன்றிய தலைமை இட மாகவும் மலை அடிவாரத்தில் போக்குவரத்துக்கான நல்ல சாலை களுடனும் அமைந்துள்ளது. மற்றும் நிறைய வியாபார நட வடிக்கைகளை உடைய இடத்தைக் கொண்டுள்ள பொது இடமாக அமைந்துள்ள ஜம்னாமரத்தூர் கிராமத்தை இணைக்கும் சாலை யும் ஆலங்காயத்தில் அமைந்துள்ளது. ஆலங்காயம் மலை அடி வாரத்தில் இருப்பதாலும், மேலும் அரசு அலுவலகங்கள் அங்கு இருப்பதாலும் மலைவாழ் இளைஞர்களுக்கு ஆலங்காயம் வேலை வாய்ப்பு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ள கஷ்டமாக இருக் காது. இந்த எண்ணத்தோடுதான் இந்த அலுவலகம் ஆலங் காயத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. ப. சுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, ஆலங் காயம் மலை அடிவாரத்தில் மட்டும் மலைவாழ் மக்கள் வாழ வில்லை. செங்கத்திலேயும் மலைவாழ் மக்கள் இருக்கிறார்கள். அவர்களும் இந்த வேலைவாய்ப்பு அலுவலகத்திலேதான் பதிவு செய்திருக்கிறார்கள். ஆகவே, செங்கத்திலே இருந்து வருகின்ற வர்களுக்கும், ஏலகிரியிலிருந்து வருகிறவர்களுக்கும் திருப்பத்தூர் மையமாக இருக்கின்ற காரணத்தால் மீண்டும் பரிசீலனை செய்து திருப்பத்தூரிலே இந்த வேலைவாய்ப்பு அலுவலகத்தை அமைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அத்தகைய உத்தேசம் அரசுக்கு இல்லை.

1981 ஏப்ரல் 1]

திரு. ந. குலசேகர பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்காயத்திலே என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற வேலை வாய்ப்பு அலுவலகத்தை வேறு இடத்திற்கு மாற்றுகின்ற உத்தேசம் அரசுக்கு இல்லை என்று சொன்னதற்காக நன்றி. மேலும், தற்போது அதை மாற்றுவது என்ற பேச்சு அடிபட்டதன் காரணத்தால் மிகுந்த பரபரப்பு வாணியம்பாடி போன்ற பகுதிகளில் ஏற்பட்டிருக்கின்றது. இந்த அறிவிப்பின் மூலம் அந்த நிலைமை தணியும்.

மேலும், ஒரு சிறிய குறைபாடு இருக்கின்றது. அங்கே இருந்து அரசாங்க மேலதிகாரிகளுடன் தொடர்பு கொள்வதற்கு வசதியாக அந்த அலுவலகத்தில் தனியாக தொலைபேசி வசதி இல்லாமல் இருக்கின்றது. ஆகவே, அதைச் செய்து தர அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்திலே 11 இடங்களில் துணை வேலை வாய்ப்பு அலுவலகங்கள் இருக்கின்றன. அவற்றில் பல இடங்களில் தொலைபேசி வசதி இல்லாதது அரசுக்கு சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. கூடிய விரைவில் அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. சுந்தரராஜன்: தலைவரவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகங்களிலே முன்பு எவ்வளவு அலுவலர்கள் அனுமதிக்கப் பட்டார்களோ அவர்கள் தான் இன்னும் பணிபுரிந்து வருகிறார்கள். தற்போது பதிவு செய்தவர்களின் எண்ணிக்கை பல மடங்கு பெருகி இருப்பதன் காரணத்தால் அலுவலர்களை அதிகமாக நியமிப்பதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது ஆலங்காயம் வேலை வாய்ப்பு அலுவலகம் பற்றிய கேள்வி. ஆகவே, மற்ற விவரங்களைக் கேட்கக் கூடாது.

பாலியஸ்டர் இழை நூல் உற்பத்தி

*குறுகிய கால வினா எண். 10.—திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பாலியஸ்ட்டர் இழைநூல் (Poleyster Stapl Fibre) உற்பத்தி செய்ய உரிமம் கேட்டு யாரேனும் விண்ணப்பித்துள்ளனரா?

(ஆ) ஆம் எனில் அவ்விண்ணப்பத்தின் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?